**செ.வெ.எண்:** **நாள்:12.09.2021**

**நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாம்களை கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டார்கள்.**

----

நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற “மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாம்களை” கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் இன்று (12.09.2021) நேரில் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தடுப்பூசி அனைவரும் போட்டுக்கொள்ளும் வகையில் “மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாம்”-களை மாவட்டந்தோறும் நடத்த உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் இன்று (12.09.2021) சுமார் 1,00,000 தடுப்பூசிகள் செலுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மாவட்டத்தில் 620 நிலையான முகாம்கள் மூலமாகவும், 80 நடமாடும் வாகன முகாம்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், வேலூர் பேரூராட்சி, சங்கர கந்தசாமிக்கண்டர் தொடக்கப்பள்ளி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லியாம்பாளையம் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பரமத்தி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, பரமத்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், கீழ்சாத்தம்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நாமக்கல் நகராட்சி, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகிய பகுதிகளில் மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெற்று வருவதையும், பொதுமக்கள் ஆர்வமுடன் தடுப்பூசி செலுத்தி கொள்ள வருகை புரிவதையும், மையங்களில் அரசின் பாதுகாப்பு வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றப்படுவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

மேலும், பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதையும், தடுப்பூசி செலுத்திய பின் அவர்களிடம் உடல் நலன் குறித்தும் விசாரித்து, இது தங்களுக்கு முதல் தவணை தடுப்பூசியா, இரண்டாம் தவணை தடுப்பூசியா என்பது குறித்தும், தடுப்பூசி முகாம் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவ குழுவினர், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களிடம் பொதுமக்களின் வருகை குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள “கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம்”-ற்கான கட்டுப்பாட்டு அறையில் அலுவலர்களிடம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.வி.ரமேஷ், நாமக்கல் நகராட்சி ஆணையாளர் திரு.பு.பொன்னம்பலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.மோகனசுந்தரம், பரமத்தி வேலூர் வட்டாட்சியர் திரு.அப்பன்ராஜ் உட்பட மருத்துவர்கள், செவிலியர்கள், தன்னார்வாலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், நாமக்கல், பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.